பாராளுமன்ற அமர்வு இலக்கம் -492

நிறுவனத்தின் பெயர் -

காணி அமைச்சு, காணி ஆணையாளர் தினைக்களம், காணி உரித்து நிர்ணயத் தினைக்களம், நில அளவைத் தினைக்களம், காணி உபயோகக் திட்டமிடல் தினைக்களம்.

பொதுக் கணக்குகளுக்கான பாராளுமன்றத்தின் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இல.119 (4) இன் கீழ் நிறுவனத்துக்குப் பொறுப்பு வகிக்கும் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானங்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்தல்.

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் பற்றிய குழுவினால் சபையில் முன்வைக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119(4) தொடர்பில் கண்காணிப்பு மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்..(2023)

பாராளுமன்ற அமர்வு இல : 492
நிறுவனத்தின் பெயர் : காணிப் பிரிவு
முதற் பகுதி : 83

தொடர் இலக்கம்	குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள்	சீர் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்/ தற்போதைய நிலமைகள்
1	தலைமை கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை.	அனைத்து கணக்காய்வு வினவல்களுக்கும் தாமதமின்றி பதிலளிக்குமாறு அனைத்து உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
2	உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் இருந்தன.	தாமதமின்றி பதிலளிக்க அனைத்து உத்தியோகத்தர்களும் அறிவூட்டப்பட்டுள்ளனர்.
3	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை வரையப்படவில்லை.	2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இவ்வமைச்சின் ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு அரச இலச்சினையும் அமைச்சின் பெயரும் பொருத்தப்பட்டுள்ளது. மேலும், உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு பொது நிர்வாக சுற்றறிக்கை 26/92 இன் பிரகாரம் தற்காலிக அரச இலச்சினைகளை காட்சிப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
4	ஒரு வாகனம் செயலிழந்த பின்னர் 08 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதிக்குள் அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.	செயலிழந்த வாகனங்கள் தற்போது அமைச்சின் வசத்தில் இல்லாததுடன், பொருளாதார ரீதியாக பயனற்ற வாகனங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி, 2026.03.24 ஆம் திகதிய கமத்தொழில் பிரிவினால் ஏல விற்பனை நடத்தப்பட்டுள்ளது.
5	ஒவ்வொரு வாகனத்திற்குமான பயணப் பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்ட அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	வாகன பயணப் பதிவேடுகள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
6	அரச வாகன விபத்துகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.	தற்போது அரச வாகனங்கள் தொடர்பாக ஏற்படும் ஒவ்வொரு விபத்திற்கும் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
7	குறித்த காலத்திற்குப் புறம்பாக ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள்ஒதுக்கப்பட்டுள்ளது	இத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அவ்வாறான நிலைமைகள் உருவாகாதவாறு கவனிக்கப்பட்டு வருகின்றது.

இரண்டாம் பகுதி : 82.00

1	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம், பிரசைகள்/ சேவைப் பெறுநர்கள்பட்டயம் முறையாகத் தயாரித்து அமுல்படுத்தப்படவில்லை.	பிரசைகள் / சேவைப் பெறுநர்கள்பட்டயம்தயாரிக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
2	நிறுவனத்தின் பிரசைகள் / சேவைப் பெறுநர்கள்பட்டயத்தின் அமுலாக்கம் தொடர்பாக கண்காணிப்பு மேற்கொள்ளவோ அல்லது மதிப்பீடு செய்யவோ ஏதுவான முறைமையொன்று உருவாக்கப்படவில்லை.	பிரசைகள் / சேவைப் பெறுநர்கள்பட்டயத்தின்அமுலாக்கத்தை கண்காணிக்கும் பொறுப்பு தொடர்புடைய பிரிவு தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் பொருத்தமான கண்காணிப்பு முறைமைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
3	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளுடன் ஒப்பிடுகையில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	தற்போது வருடாந்த மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் உத்தியோகத்தர்கள் பயிற்சி வாய்ப்புகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் 50% ஐ விட அதிக அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
4	உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகளுக்காக நிதி ஒழுங்குவிதி 156(1) இன் பிரகாரம் அறவீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.	உத்தியோகத்தர்களால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட இழப்புகள் அறவிடப்பட்டுள்ளதுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய இழப்புகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவூட்டப்பட்டு சட்டமா அதிபரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நிலையியற் கட்டளை இல. 119 (4) இன் பிரகாரம் அரசாங்கக் கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சமர்ப்பித்தல் - 2023

பாராளுமன்ற அமர்வு இலக்கம் - 492
நிறுவனத்தின் பெயர்

தொட. இல.	குழுவினால் இனங்கண்டுகொள்ளப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை
01	கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐய வினாவுக்கு ஒரு மாத காலத்தினுள் பதில் அளிக்கப்படாதிருந்தமை.	சில கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதற்குத் தேவையான தகவல்களை மாகாணங்களுக்கு இடையேயான அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய சந்தர்ப்பங்களில், மேலதிக காலம் தேவைப்படுவதனால் அதற்குப் பதிலளிப்பதற்கு ஒரு மாதத்திலும் அதிக காலம் எடுக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில், அந்த கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு மேலதிக காலத்தைக் கோரி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்துபூர்வ கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்களை வழங்குவதனை துரிதப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அதிகாரிகளை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
02	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்தினுள் பதில் அளிக்கப்படாதிருந்தமை.	கணக்காய்வு ஐய வினாக்களுக்கு உரிய காலப் பகுதியினுள் பதில் அளிக்குமாறு திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
03	வாகனமொன்று சேதமடைந்து 08 மாதங்களிலும் குறைந்த காலப் பகுதியினுள் புறத்தொதுக்கப்பட்டிருக்காதிருத்தல்.	தற்போது இந்த வாகனம் புறத்தொதுக்கப்பட்டுள்ளது.
04	சகல வாகனத்திற்குமான குறிப்பேடு (லொக் புத்தகம்) இற்றைப்படுத்தப்பட்டுப் பேணி வரப்பட்டிருக்காமை.	சகல வாகனத்திற்குமான குறிப்பேடு (லொக் புத்தகம்) இற்றைப்படுத்தப்பட்டுப் பேணி வரப்படுகின்றது.
05	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டிறுதியில் மீதி நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்களை ஏற்படுத்திக்கொண்டிருந்தமை.	அந்த நிலைமைகள் சரி செய்யப்பட்டுள்ளன. தற்போது மீதி நிதி ஏற்பாடுகள் வரையறையை விஞ்சிய பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்படுவதில்லை.
06	ஒரு வருடத்திலும் அதிக காலமாக நிலுவைக் கடன் தொகை நிலவுதல்.	(அ) இறப்பெய்திய அலுவலர்களான திரு. டப்ளியு.எம்.ஏ.பீ.திசாநாயக்க, திரு. பிரியங்ஜன சில்வா மற்றும் திரு. வீ.ஜீ.எஸ்.மிஹிர பண்டார ஆகிய அலுவலர்களின் மரண பணிக்கொடைகளை தயாரிப்பதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன் திரு. எம்.ஜீ.குடாபண்டா அவர்களின் மனைவிக்கு விதவைகள் அநாதைகள் ஓய்வூதியத்தை தயாரித்தலுடன் தொடர்புடைய

		ஆவணங்கள் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைய மேற்குறிப்பிடப்பட்ட மரண பணிக்கொடைகள் மற்றும் விதவைகள் அநாதைகள். ஓய்வூதியத்தை தயாரித்ததன் பின்னர் நிலுவைக் கடன் தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு முடியும். (ஆ) பணி நீக்கப்பட்டுள்ள அலுவலர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை - திரு. டீ. புஷ்பகுமார - தற்போதைய நிலுவைக் கடன் தொகை ரூ. 99,180.44 ஆகும். நிலுவைக் கடன் தொகையை செலுத்தித் தீர்க்குமாறு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. திரு. ஏ.எஸ். லியனாரச்சி என்பவரின் நிலுவைக் கடன் தொகையான ரூ. 44,979.56 தொகையை செலுத்தித் தீர்க்குமாறு அலுவலருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ) பணியை விட்டுச் சென்றுள்ள அலுவலர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை ரூ. 154,354.00 ஆகும். 2026.04.01 ஆம் திகதியாகும்போது நிலுவைக் கடன் தொகையை செலுத்தித் தீர்க்குமாறு இறுதி அறவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்காக கோப்பு சட்டப் பிரிவுக்கு கையளிக்கப்பட்டுள்ளது.
07	பொது வைப்புக் கணக்கில் காலாவதியாகியிருந்த வைப்புத் தொகை தொடர்பாக நி.ஒ. 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை	காலாவதியாகியுள்ள வைப்புக்கள் எதுவுமில்லை.
08	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்தக் கட்டு நிதி குறித்த அலுவல் நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படாதிருத்தல்.	இந்த நிலைமை தவிர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.
09	அங்கீகரிக்கப்பட்ட வரையறையை விஞ்சி ஆளணிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டிருத்தல்	அங்கீகரிக்கப்பட்ட வரையறைக்குள் மாத்திரமே ஆளணிக்காக அங்கத்தவர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.
10	2017.09.20 ஆம் திகதிய 04 / 2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைப் பிரகாரம் ஆளணி தொடர்பான தகவல்களை காலாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பாதிருத்தல்.	ஆளணி தொடர்பான தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு சகல காலாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
11	2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைப் பிரகாரம் பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம் உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம் உரிய பிரகாரம் தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
	நிறுவனத்தின் பிரஜைகள் /சேவை	பிரஜைகள் /சேவை பெறுநர் பட்டயம்

	பெறுநர் பட்டயம் நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கான முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்காமை.	காட்சிப்படுத்தப்படுவதுடன், அது நடைமுறைப்படுத்தப்படல் தொடர்பாக கண்காணிப்பு / மதிப்பீடு செய்வதற்கான குழுவொன்றை எதிர்காலத்தில் நியமிப்பதற்கு ·முன்மொழியப்பட்டுள்ளது.
	திட்டமிடப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களில் வழங்கப்பட்டிருந்த வாய்ப்புக்கள் 50% இலும் குறைந்த மட்டத்தில் நிலவியமை.	செலவுகள் கட்டுப்பாடு தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கைகளுக்கமைய, பயிற்சிகளை நடாத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக வரையறுக்கப்பட்ட சில பயிற்சிகள் மாத்திரம் நடாத்தப்பட்டன. 2026 ஆம் ஆண்டிலிருந்து ஆளணியில் 50% இற்கும் அதிகமானோருக்கு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மனித வளங்கள் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வுக் கருத்துரை, சிறந்த மட்டத்தில் / இடைநிலை மட்டத்தில்/ பாதகமான மட்டத்தில் நிலவுகின்றமை.	சிறந்த மட்டம்

நிலையியற் கட்டளை இலக்கம் **119(4)- இன்கீழ்(2023), அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான அவதானிப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த சமர்ப்பிப்பு.**

பாராளுமன்ற அமர்வு இல: 492

நிறுவனத்தின் பெயர்: காணி உரித்து நிர்ணயத் திணைக்களம்

தொடர் இல.	குழுவினால் அடையாளங் காணப்பட்ட பலவீனங்கள் / குறைபாடுகள்	நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை
01	கணக்காய்வாளர் நாயகத்தின் ஐயவினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பிவைக்கப்படவில்லை.	சாத்தியமான போதெல்லாம் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உடனடியாகப் பதில்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச அலுவலகங்களுக்கும் உரிய பிரிவுகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
02	உள்ளக கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.	பிரதேச அலுவலகங்களிடமிருந்து பதில்களைக் கோருவதில் இவ்வாறான தாமதங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இருந்த போதிலும், உடனடியாகப் பதில்களைச் சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட பிரதேச அலுவலகங்களுக்கும் உரிய பிரிவுகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
03	அனைத்து வாகனங்களினதும் உடைமை உரிமையை உறுதிப்படுத்தும் கடிதங்கள் கைவசம் காணப்படாமை.	திணைக்களத்திற்குச் சொந்தமான 40 வாகனங்களில் 39 வாகனங்களின் உரிமை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் உள்ளது. மற்ற வாகனம் ஐக்கிய நாடுகள்உலக உணவு மற்றும் விவசாய அமைப்பிற்குச் சொந்தமான 65-0748 இலக்கத்தைக் கொண்ட ஒரு வாகனத்தை மாற்றுவதற்கு மாத்திரமே தேவையான ஆவணங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.
04	ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்று 8 மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதிக்குள் அகற்றப்பட்டிருக்கவில்லை.	விலைமனுக்கள் 2024.10.11 ஆந் திகதி கோரப்பட்டு 53-0049 இலக்கத்தைக் கொண்ட வாகனம் ஏலம் விடப்பட்டுள்ளது.
05	ஒவ்வொரு வாகனத்திற்குமான குறிப்புப் புத்தகங்கள் இக்காலப் பகுதி வரைசீராகப் பேணப்படாமை.	அனைத்து வாகனங்களுக்குமான குறிப்புப்புத்தகங்கள் இக்காலப்பகுதிவரை சீராக்கப்பட்டுள்ளன.
06	நிதியொழுங்கு விதி (FR) 94(1) இன் பிரகாரம் செலவினத் தலைப்பொன்றிற்காக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து, ஆண்டிறுதியில் பயன்பாட்டிற்குப் பின்னர் எஞ்சியிருந்த ஒதுக்கீட்டு எல்லை விஞ்சும் வகையில் நிச்சயப் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.	2024, 2025 ஆம்ஆண்டுகளில் ஒதுக்கீடுகளை விஞ்சும் வகையில் நிச்சயப் பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
07	ஒரு வருடத்திற்கும் மேலான காலப் பகுதியிலிருந்து நிலுவையிலுள்ள கடன் மீதிகள் காணப்படல்.	2023.12.31ஆந் திகதி வரையில் ஒருவருடத்திற்கும் மேலாக நிலுவையாகக் காணப்பட்ட அனைத்து

		கடன் மீதிகளும் தற்போது தீர்க்கப்பட்டுள்ளன. தற்போது ஒருவருடத்திற்கும் மேலாக நிலுவையிலுள்ள கடன் மீதிகள் பின்வருமாறு: இளைப்பாறியோர்- 502,091 நிறுத்திவைக்கப்பட்டோர்- 30,271 பதவியைவிட்டுவெளியேறியோர்-5,700 538,062 இந்த கடன் மீதிகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
08	பொதுவைப்புக்கணக்கிலுள்ள காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதியொழுங்கு விதி (FR) 571 இன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	2025.12.31 ஆந் திகதிவரையில் காலங் கடந்த வைப்புக்கள் எதுவுமில்லை.
09	நிதியொழுங்கு விதி (FR) 371 இன்பிரகாரம், வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்கள் நோக்கம் பூர்த்தியடைந்ததன் பின்னர் ஒருமாத காலத்திற்குள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களைத் தீர்ப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்ட போதிலும், நோக்கம் பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக முற்பணங்களைத் தீர்க்குமாறும், எஞ்சிய தொகை ஏதுமிருப்பின் அதனை உடனடியாகவைப்புச் செய்யுமாறும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
10	20.09.2017 ஆந்திகதிய 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின்பிரகாரம், ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து ஒருமாத காலத்திற்குள் பதவிவெற்றிட ஒழுங்கமைப்பு முகாமைத்துவசேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தகவல்களை இற்றைப்படுத்துவதன் ஊடாக பதவி வெற்றிட விபரங்களை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
11	பொதுமக்களினால் கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்பட்டமை/வழங்கப்படாமை குறித்த விபரங்களை உள்ளடக்கிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை..	தலைமையகத்திலும் பிராந்திய அலுவலகங்களிலும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிய பதிவேடுகள் பேணப்பட்டுவருகின்றன.
12	நிறுவனத்தின் குடிமக்கள் /சேவை பெறுநர்சாசனத்தின் அமுலாக்கத்தைக் கண்காணிப்பதற்கான அல்லது மதிப்பீடு செய்வதற்கான ஒருநடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	குடிமக்கள்/ வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பொதுமக்கள்/ வாடிக்கையாளர் சாசனத்தின் நடைமுறைப்படுத்தலைக் கண்காணிக்குமாறு பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. பிரதேச அலுவலகங்களின் கண்காணிப்பு நடவடிக்கைகள் தலைமை உள்வாரி கணக்காய்வாளர் மற்றும் தலைமை அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன.

13	திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% இற்கும் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டது.	பயிற்சித் திட்டத்திற்கமைவாக பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
14	நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ள /பாதகமான மட்டத்தில் காணப்பட்டது.	2023 ஆம் ஆண்டில் முனைப்பழியுள்ள அபிப்பிராயமே காணப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் ஒருதெளிவான/முனைப்பழியற்ற அபிப்பிராயம் காணப்பட்டது.
15	அனைத்து உத்தியோகத்தர்களினதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை..	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் தற்போது வரை அவற்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

நிலையான கட்டளை இலக்கம் 119(4) இன்பிரகாரம் அரசகணக்குகள் குழு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையைச் சார்ந்த அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் **இலங்கை** நிலஅளவை **திணைக்களம்** -2023	
குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	சரி செய்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய நிலை
01. 2024.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்கங் கொண்ட அரச கணக்குகள் சுற்றறிக்கையின் படி அரச சம்பளங்களை தயாரிக்கும் கணனி மென்பொருள் தொடர்பான கடவுச் சொல்லை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாற்றப்பட்டிருக்கவில்லை.	நிலஅளவையாளர் பிரதானஅலுவலகத்தில் பயன்படுத்தப்படும் GPS – PAYROLL மென்பொருளிற்கானகடவுச் சொல் (Password), 2023 ஆம் ஆண்டில் இருசந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டுள்ளது. அத்தோடு,அன்றிலிருந்து இதுவரையிலான ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒருமுறை தொடர்ந்து அக் கடவுச் சொல் இற்றைப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைளெடுக்கப்பட்டுள்ளது.
02. வருடாந்த பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	வருடாந்த பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு தொடரமைச்சின் செயலாளருடைய அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.
03. கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் பதில் வழங்குவதில் அந்தளவிற்கு தாமதம் ஏற்படவில்லை, ஆயினும் பிரதேச அலுவலக கணக்காய்வில் மேலதிக நிலஅளவையாளர் தலைமையதிபதி (களத் துறை) ஊடாக மாகாண நிலஅளவையாளர் தலைமையதிபதி ஊடாக மாவட்ட சிரேட்ட நிலஅளவை அதிகாரி ஊடாக பிரதேச அலுவலகங்களில் இருந்து பதில்களை பெற்றுக் கொள்வதில் சிறிது தாமதம் ஏற்பட்டது.
04. உள்ளகக் கணக்காய்வு விசாரணைக்காக ஒரு மாதத்திற்குள் பதில்களை வழங்காத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளது.	ஒவ்வொரு உள்ளக கணக்காய்வு விசாரணைக்கும் பதில் வழங்குவதற்கு ஒரு மாதத்தை விட அதிக காலம் எடுக்கப்படவில்லை. அத்தோடு,அவ்வாறான உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்குவதற்கு பிரதேச அலுவலங்களில் இருந்து தகவல்களை பெற்றுக் கொள்ளவேண்டியிருப்பதனால், அதற்காக சிறிது தாமதம் ஏற்பட்டது.

05. வழக்கிழந்த வாகனமொன்று 8 மாதங்களுக்கு அதிகமான காலமாகியும் அது அகற்றப்பட்டிருக்கவில்லை.	அகற்றுவதற்காக உள்ள வாகனங்களுக்கு அகற்றல் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, அவ் அறிக்கைகளின் படி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
06. ஒவ்வொரு வாகனத்திற்குமான லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை.	ஒவ்வொரு வாகனத்திற்குமான லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
07. *அரச* வாகன விபத்துக்கள் தொடர்பாகநி.ஒ. இன் படிசரியானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிதி ஒழுங்குவிதிகளின் பிரமாணங்களுக்கும் காலவரையறைகளுக்கும் அமைவாக தாமதங்கள் ஏற்படுவதை குறைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
08. ஒரு வருடத்திற்கும் அதிகமான காலம் நிலுவைக் கடன் மீதி காணப்படுகின்றது.	2023.12.31 ஆம் திகதியில் காணப்பட்டகடன் மீதிகளில் 2026.04.30 ஆம் திகதிக்குரூ. 1,994,196.62 தொகையை அறவிடப்பட்டுள்ளது. அத்தோடு, மிகுதிக் கடன் மீதியை தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் படி பொது கணக்கு குழுவால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் மீதான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் சமர்ப்பிப்பு.

பாராளுமன்ற கட்டளை எண்:- 492

திணைக்களம்:- நிலப்பயன்பாடு கொள்கைத்திட்டமிடல் திணைக்களம்- **2023**

தொடர் இலக்கம்	**குழுவினால்/ குழுக்களினால் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள்**	**எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தற்போதைய நிலை.**
01.	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டு தற்போது அந்த திட்டத்தின் படி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.
02.	அரச வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதியியல் பிரமாணங்களின படி உரிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை.	அரச வாகன விபத்துக்கள் தற்போது நிதியியல் பிரமாணங்களின் படி கையாளப்படுகின்றன.
03.	வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 50 ற்கும் குறைவானதாக உள்ளது.	திறைசேரி செயலாளரால் 27.01.2022 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் BD/CBP/01/01/05/2022 படி உள்ளுர் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதில் உள்ள வரம்புகள் காரணமாக திணைக்கள கட்டாய பயிற்சிகளுக்கு மட்டுமே பயிற்சி வழங்கப்பட்டது. தற்போது பயிற்சி திட்டத்தின் படி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.